மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியை படித்துப் பார்க்க வேண்டும்.

திரு. மி. வின்செண்ட் : அலுமினியப் பங்கீடு கொடுத்து மின்சாரம் பெறும் கேரளா தமிழ்நாடு ஒப்பந்தம் வெற்றிகரமாக அமைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 11—7—1980 அன்று அனுப்பிய கடிதத்தின்படி கேரள அரசு தமிழக அரசு மால்கோ சம்பந்தமாக அலுமினியப் பங்கீடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்குச் செய்யப்பட்டது. மத்திய அரசு ஒத்துக் கொண்டது இந்த ஆண்டுக்கு மட்டுந்தான். இதிலே இரண்டு வருஷம் இன்னும் பாக்கியிருக்கிறது.

திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மால்கோ நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் இருந்து மின்சார கட்டணப் பாக்கி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அதை வசூலிக்க நடவடிக்கை அப்போது இருந்த அரசால் எடுக்கப்பட்டதா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.

ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள்.

*கு. கா, வி. எண் 29—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) இல்லை.

1980 ஜூலை 19]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஒரு தாலூகாவினுடைய தலைநகராக இருக்கிற காரணத்தினால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலிருந்து அதுபற்றிய குறிப்ப எதுவு அரசுக்கு வரவில்லை. அப்படிப்பட்ட குறிப்பு வருகிறபோது அரசு பரிசீலிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்கெனவே இருந்துவருகின்ற சிவில் கம் கிரிமினல் கோர்டுகளை நீக்காமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இருப்பதை நீக்குவது பற்றி எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை. அப்படிப்பட்ட எண்ணமும் அரசுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் இருக்கிற இடங்களிலே இன்னும் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைவிட அப்படி இல்லாத இடங்களிலே ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும். அந்த வகையிலே ஆற்காட்டிலே நீதிமன்றத்தை இனிமேலாவது ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியிலே மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய அரசு அங்கே நீதிமன்றத்தைத் துவங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே திரு. திருவேங்கடம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். அதைப்பற்றி ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

சென்னை மாநகரில் கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்பு.

*கு. கா. வி. எண் 30— திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—